8th August 1963]

போது எல்லோரும் அதில் நல்ல முறையில் பழக்கப்பட்டு அனுபவம் பெற்றிருப்பதால் அதிலுள்ளவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

Scientific and Industrial Exhibitions

*57 Q.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Indusutries be pleased to state whether there is any proposal to set up a permanent scientific and industrial exhibition at each district headquarters?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

திரு. கே. ஏ. மதியழகன் : தொழில் வளர்ச்சி, விஞ்ஞானம் ஆகியவைகளில் அரசாங்கம் காட்டுகிற அக்கறையை விருத்தி செய்வதன் அவசியத்தை முன்னிட்டு இம்மாதிரி அமைப்பது அவசியம் என்று கருதவில்லையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது தேசத்தில் பல நாஷனல் லாபரட்ரீஸ் இருக்கின்றன. சாதாரணமாக 'ஸயன்டிபிக் அன்ட் இண்டஸ்ட்ரியல் ரிசர்ச்' முதலியவை செய்ய கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும். அதனால் ஒவ்வொரு ஜில்லாவிலும் வைக்கமுடியாது. எக்ஸிபிஷன் வைக்கலாம். நம்முடைய இன்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மென்டில் சேல்ஸ் எம்போரியம் ஒவ்வொரு ஜில்லாவிலும் வைத்திருக்கிறோம். எந்தெந்த பண்டங்கள் நம் ராஜ்யத்தில் உற்பத்தியாகிறதோ அவற்றை விற்பனை செய்ய ஏற்பாடு செய்கிறோம்.

Schools for adults

*58 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that sanction has already been accorded by the Government for the opening of adult schools in rural and urban areas during April, 1963; and

(b) if so, the reason for having ordered them to be stopped?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இம்மாதிரியான பள்ளிகள் நாடெங்கும் திறக்கப்பட்டது. என் தொகுதியில் கூட இரண்டு பள்ளிகள் திறக்கப்பட்டு மூடப்பட்டுள்ளன. அதற்கு யார் காரணம் என்று நான் அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனி கேள்வி கேட்டால் விடை அளிக்கலாம். பொதுவாக இம்மாதிரி முதியோர் பள்ளி அமைப்பதற்கு மத்திய ஆட்சியினர் உதவி அளிப்பதாக கூறியிருக்கிறார்கள். எவ்வளவு உதவி அளிப்பார்கள் என்று அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கிறது. அது தெரிந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.